பிறப்பால் சாதி இல்லை

சென்னை ஆரிய சமாஜம் (தமிழ்நாடு)
வெளியீடு

ஓம்

பிறப்பால் சாதி இல்லை

K. வேலாயுத ஆர்ய

வெளியிட்டோர்:

சென்னை ஆரிய சமாஜம் (தமிழ்நாடு)

183, அவ்வை ஷண்முகம் சாலை

சென்னை-600 086

"வேதஜோதி" சிறுநூல் வரிசை எண் 2:

(1986)
(1991)
(1995)

அச்சிட்டோர்: பொன்மணி கலை அச்சகம்
6, தீத்தாரப்பன் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.
தொ.பேசி : 845397

பிறப்பால் ஜாதியில்லை

பதிப்புரை

'வருணாசிரமம்' 'ஜாதி/இன வேறுபாடுகள்' முதலியன, இச் சமுதாயத்தில் பன்னெடுங்காலமாக நின்று நிலவி பேயாட்டம் ஆடி வருவதை நாம் அறிவோம். இதனால் ஏற்பட்டுள்ள அவல நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, நம்மிடையே சிலர், தம்மைப் 'பகுத்தறிவுச் சிந்தனையாளர்' என பறை சாற்றிக் கொண்டு, இந்த மண்ணின் மைந்தர்களைச் சாடிவருவதையும் நாம் அறிவோம். இவர்கள் தம் எதிர் மறைப் பேச்சுகளால் எதையும் தாங்கும் இதயம் படைத்த நம்மைதான் ஏசவும், பேசவும் முடியும். இவர்களால் கிறித்தவ, இசுலாமிய மதத்தவரிடையே நிலவும் பல்வேறு கடவுள்கள், ஜாதி/இன வேறுபாடுகள், மூடநம்பிக்கைகள் முதலியனவற்றை இடித்துரைக்கவோ, பழித்துப் பேசவோ துணிவு கிடையாது.

அன்மையில் ஒரு அன்பர் என்னைச் சந்தித்தார். பால் தருகின்ற பசுக்களில் 'சிந்திப்பசு', 'சீமைப்பசு', 'நாட்டுப்பசு' என்றும், எருமைகளில் 'முர்ரா எருமை', 'டெல்லி எருமை', 'நாட்டு எருமை' என்றும் பல இனங்கள்/ஜாதிகள் இருக்கும்போது, மனிதர்களில் பல இனங்கள்/ஜாதிகள் இருப்பதில் என்ன தவறு என்று அவர் வினவினார் அந்த அன்பருக்கு பசு, எருமை என்பன தான் இனம் அல்லது ஜாதியாகும். சிந்திப்பசு', சீமைப்பசு' என்பன பசுக்களின் தன்மையையும், செயல்பாட்டையும் குறிப்பிடுகின்ற வெவ்வேறு விதங்கள் (Variety) என்ற எண்ணம் எழாததால், அவரை அவ்வாறு வினவத்தூண்டியது என அவரிடம் குறிப்பிட்டேன்.

பல்வேறு மலர்களில் மல்லிகை மலர் ஒரு குறிப்பிட்ட இனம் அல்லது ஜாதியாகும். 'மல்லிகை'யில், 'அடுக்கு மல்லிகை', அந்தி மல்லிகை', 'ஜாதி மல்லிகை', 'காட்டு மல்லிகை', 'குண்டு மல்லிகை' என்பன மல்லிகையின் பல விதங்களாகும்.

தாவர இனம், விலங்கினம், மனித இனம் ஆகியவைதான் 'இனங்கள்' அல்லது 'ஜாதிகள்' ஆகும். ஒவ்வொரு இனமும், தன்மை,

பண்பு, செயல்திறன் ஆகியவற்றுக்கு ஏற்ப பல விதங்களாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன.

முற்காலத்தில் மனித சமுதாயத்தின் பல்வேறு தேவைகளை, பொறுப்புகளை ஒவ்வொருவரும் தமது வசதிக்கும், ஆற்றலுக்கும் ஏற்ப, பிரித்துக் கொண்டு, அவரவர் கடமைகளைத் திறம்பட ஆற்றி வந்தனர். அவ்வாறு பொறுப்புணர்வுடன் கடமையாற்றி வந்தோர், அவரவர் தொழிலின் பெயரால் அறியப்படலாயினர். 'மருத்துவத் தொழில் புரிவோரின் மக்கள் மருத்துவத்தொழிலில் ஈடுபடாவிட்டாலும் அவர்களை மருத்துவர் (Doctor) என அழைக்கலாமா? அவ்வாறே, ஆசிரியர், வழக்குறைஞர், பயிர்த்தொழில் புரிவோர், துப்புறவுப் பணிசெய்வோர் முதலியோரும் உடலின் பல உறுப்புகள் போன்று மானிட சமுதாயம் என்ற உடலின் பல உறுப்புகள் போன்றோர் ஆவர். உடலுறுப்புகள் ஒன்றுக்கொன்று உயர்ந்தவையோ தாழ்ந்தவையோ அல்ல அல்லவா? அதேபோன்றுதான் தொழில்களும், தொழிலை ஆற்றுபவர்களுமாகும். இதனை நாம் தெளிவாக உணர்வதுடன் நில்லாது மற்றவர்களுக்கும் உணர்த்த வேண்டும்.

வணக்கம்.

அன்பன்,
R. பாண்டுரங்கராவ்
இணைச்செயலர்
பதிப்புகள்-பொறுப்பாளர்
ஆரிய சமாஜம், சென்னை.

சென்னை
14-4-95

ஓம்

பிறப்பால் சாதி இல்லை

"சாதிகள் இல்லையடி பாப்பா" என்று பாரதி முழங்கிச் சென்று அரை நூற்றாண்டுக்கும் அதிகமாகிவிட்டது. சாதி ஒழிப்பு பேசி அரசியலில் ஆதிக்கம் பெற்று வந்த சுதந்திர இந்தியாவின் அரசியல் கட்சிகள், நடைமுறையில் சாதி அரசியலைப் பின்பற்றி, நமது நாட்டை மேலும் அழிவுக்குக் கொண்டு சென்றவாறு உள்ளன சாதிகள் உள்ள காலம் வரை தீண்டாமையும் நடைமுறையில் இருக்கத்தான் செய்யும். பிறப்பால் உயர்வு, தாழ்வு என்கிற சூழ்நிலை உள்ள இந்த இந்து சமூகத்தை விட்டு வெளியேறிக் கொள்கை அளவிலாவது சாதிகள் இல்லாத கிறித்தவ, இசுலாம் சமுதாயங்களே மேல்; குறிப்பாக0 இசுலாம் மேல் என்று "அரிசனங்கள்" என சாதி இந்துக்களால் அரசியலில் செல்லப் பெயர் இடப்பட்டு நடைமுறையில் தீண்டப் படாதிருப்போர், கலகம் செய்து, கூட்டத்தோடு இசுலாமில் இணைந்து வருவதும் ஒரு உண்மை. 1980-81ல் தமிழகத்தில் நடைபெற்ற மீனாட்சிபுரம் மத மாற்றம், அகில இந்தியா முழுவதும் இந்துக்களிடையே ஒரு எச்சரிக்கையை, விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது இந்து சமய, சமுதாயக் காவலனான ஆரிய சமாஜம், சவாலை ஏற்று, வரலாறு தனக்கு இட்டுள்ள கட்டளையை ரிஷி தயானந்தர் பெயராலும், வேதத்தின் பெயராலும் நிறைவேற்றப் புறப்பட்டுள்ளது.

மகாபாரதக் காலத்திற்குப் பின் வேதத்தை வெளிச்சமிட்டுப் பரப்பி வந்த ரிஷி முனிவர்களின் பரம்பரை விட்டுப் போனதால் தன்னலக்காரர்களான வேதத்தின் எதிரிகள், வேதத்தின் பெயரால், மக்களைச் சுரண்டுவதற்காக பலவிதமான சாதி, மதச் சம்பிரதாயங்களை உருவாக்கினர். இன்று இந்து மதம் எனத்தோற்றம் அளிக்கும் பழமையான மதங்கள், இந்துக்களை சாதி, சம்பிரதாயக் கட்டுகளில் பிணைத்து அழித்து விடுகின்ற உண்மையை, சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்கள்

1875ல் பறைசாற்றி, இந்துக்கள் உயர்வதற்கு வேதம் ஒன்றே வழி என்று அறிவுறுத்தி, உண்மையான இந்து சமயமாகிய வேத தர்மத்தை மீண்டும் நிலைநாட்டிப் பரவச்செய்யவே, ஆரிய சமாஜத்தை அமைத்தார். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற வேதக் கருத்தைப் பரவச் செய்து, அது கூறும் பிராமண, சத்திரிய, வைசியச், சூத்திர வருணங்கள் எனப்படும் சமுதாய அமைப்பை மீண்டும் கொண்டு வந்து சமுதாயச் சீர்திருத்தம் செய்யாத வரை, இந்துக்கள் அழிவிலிருந்துத் தப்ப முடியாது என்ற உண்மையை, ஆரிய சமாஜம் எனப்படும் "**சான்றோர் அவை**" கூறி வருகின்றது.

ஆரிய சமாஜமும், தயானந்தரும் தோன்றும் முன்னரே, இந்து ஞானிகள் பிறப்பால் சாதி இல்லை - உயர்வு, தாழ்வு இல்லை, மனிதர்களின் பண்பு, செயல், இயல்பு எனப்படும் தன்மை தொழில் தன்னுணர்வுகளே சமுதாயத்தில் அவர்களுடையப் பதவிகளை முடிவுசெய்கின்றன என்ற உண்மையை உணர்ந்திருந்தனர் என்பதை, ரமேஷ்சந்திர தத்தர் எனும் அறிஞர், 1908ல் தாம் இயற்றிய, "பண்டைய இந்து நாகரிகம்" (Ancient Hindu Civilisation) என்ற நூலில் விரிவாக விளக்கியுள்ளார். வாயு புராணம் "கிருதயுகத்தில் சாதி அமைப்பு இருக்கவில்லை. பின்னர் பிரம்மா தொழில்களுக் கேற்பச் சமுதாய பிரிவுகளை அமைத்தார். ராமாயணம் உத்தரகாண்டத்தின் 14வது பகுதியும் பிராமணர்கள் கிருத யுகத்தில் கடுந்தவம் செய்தனர்; சத்திரியர்கள் திரேதாயுகத்தில் தோன்றினர்; பிறகு தான் நால்வகை வருண அமைப்பு உண்டாயிற்று" என்று கூறுகிறது. மகாபாரதத்தின் சாந்தி பருவத்தின் 168வது பகுதியில் "ஒரு நேர்மையான, புரியக்கூடிய விவரம் சாதி அமைப்பு" என்ற செய்தி கிடைக்கிறது என்கிறார், ரமேஷ்சந்திர தத்தர். அதன்படி, சிவந்த நிறம் கொண்ட இரு பிறப்பாளர்களே, தம் வேள்விக் கடமைகளை மறந்ததால், வைசியர் ஆயினர். கருமை நிறம் கொண்ட இரு பிறப்பாளரே, தம் வேள்விக் கடமைகளை மறந்து, சூத்திரர் ஆயினர்.

நால்வகை வருணங்களின் உற்பத்தியைப் பற்றி புருஷ ஸுக்தம் எனப்படும் ரிக் வேதமந்திரத் தொகுப்பு கூறுவதையும் குறிப்பிட்டப் பின்னர், ரமேஷ் சந்திரதத்தர், பிரம்மாவின் உடலி

லிருந்து இந்தச் சமுதாயப்பிரிவுகள் தோன்றிய விவரத்தை, ஒரு அலங்காரமான வருணனையாகவே பண்டைய நூல்கள் உள்ளபடி ஏற்றன என்றும் கூறிவிட்டு, யஜுர் வேதத்தின் 14, 16 அத்தியாயங்களில் கூறப்படுகின்றத் தொழில் சார்ந்த பிரிவுகளே யன்றிப் பிறப்பால் அமைந்தவை அல்ல எனவும் விளக்குகின்றார் இதையேத் தைத்திரியப் பிராமணம் எனும் வேத விளக்க நூலும் வேறு சொற்களில் கூறுகின்றது. "ஆரிய (இந்து) மக்கள் சமுதாயத்தை இந்த வருண அமைப்பு ஒருபொழுதும் பிரித்ததில்லை; பிளவுறச் செய்ததில்லை "Caste never divided and dis-united the Aryan people" என்று முடிவாகக்கூறி, சான்றாகப் பின்வரும் இந்து வரலாற்று நிகழ்ச்சிகளையும் அது கூறுகின்றது. யாஜ்ஞ வல்கியர் எனப்படுபவர், பிராமண வருண (சாதி அல்ல-அதாவது பிறப்பால் பிராமணர் அல்ல) பெரியாருக்கும், சனக மன்னர் உபதேசம் செய்ததால், அந்தச் சத்திரியரும் பிராமணராகவே ஏற்கப்பட்டார். (சதபதப் பிராமணம்). ஒரு அடிமைப் பெண்ணின் மகனான கவசர் எனும் அறிஞர் துவக்கத்தில் பிற பிராமணர்களால் புறக்கணிக்கப் பட்டாலும் பின்னர் ஒரு முனிவராக ஏற்கப்பட்டார் (ஐதரேய பிராமணம்) சத்யகாமர் எனும் முனிவர், ஜாபாலி அம்மையாருடைய மகன், அவருடைய தந்தை இன்னார் என்று தாயாரால் சொல்ல முடியாத உண்மையை, வெளிப்படையாகத் தன் குருவிடம் எடுத்துக்கூறிய பொழுது, நீ உண்மை பேசுகிறவன், நீ பிராமணனே என்று, அந்தக் குருவானவர் ஏற்று, அவருக்கு வேதோபதேசம் செய்த வரலாறும் உண்டு. வேத கால முனிவர்களான பராசரர், வசிஷ்டர், வேதவியாசர் போன்றோரின் வரலாறுகள், பண்டையக்காலத்தில் இந்துக்களிடையில் பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை என்பதை எடுத்துக் கூறுகின்றன. சாதி வெறிபிடித்தப் பிற்கால இந்துத் தலைவர்கள் அதாவது "சனாதனிகள்" இந் உண்மைகளை மறைக்க முடியாமல், "ரிஷி மூலம் நதி மூலம் பார்க்கக்கூடாது" என்று கூறி மழுப்பி வருகின்றார்கள். இந்த நிலையில் தான் இந்து சமுதாயத்திற்குப் புத்துயிரும், புதுவலிவும் தந்த ஆரிய சமாஜ நிறுவனர், சுவாமி தயானந்தர் முழங்கினார், "வேதமே உண்மை அறிவு நூல்; எனவே வேதத்திற்குத் திரும்பிச் செல்லுங்கள்" என்று.

வேதம் எல்லா தருமத்திற்கும் (அறத்திற்கும்) முதல் நூல

என்பதை சனாதனிகளே ஏற்றுக் கொள்கின்றனர். இடைக்காலத்தில் வேதத்தின் உண்மைப் பொருள் விளங்காத காரணத்தால் பிறப்பால் சாதி உயர்வு, தாழ்வு மனப்பான்மையும், தீண்டாமை எனும் கொடுமையும் இந்து சமுதாயத்தில் தோன்றி அதனை அழிக்கலாயிற்று. பிரம்மாவின் முகத்திலிருந்து தோன்றியவன் பிராமணன், தோள்களிலிருந்து சத்திரியனும், தொடையிலிருந்து வைசியனும், கால்களிலிருந்து சூத்திரனும் தோன்றியதாக புருஷ ஸுக்த மந்திரத்திற்குத் தவறான பொருள் கொடுத்து வந்ததை தயானந்தர் கண்டித்து "ப்ராஹ்மணோஸ்ய முகமாஸ்த்" என்ற அந்தப் புகழ்பெற்ற வேத மந்திரத்தின் உண்மைப் பொருளைத் தமது ஒப்பற்ற சத்யார்த்தப் பிரகாசம் அல்லது உண்மை நெறி விளக்கம் என்ற நூலில் விளக்கியுள்ளார்.

'பிறப்பால் சாதிப் பேசி பண்பியல்பு செயல் தன்மைகளை மறுப்பவனை இப்படிக் கேட்க வேண்டும், "ஐயா ஒரு பிராமணன் கிறித்தவ இசுலாமிய மதத்தில் சேர்ந்தால் அவனை பிராமணன் என்பதில்லையே ஏன்?" அவன் பிராமண ஒழுக்க நெறிகளை விட்டதனால் என்பீர். ஆதலால் பிறப்பாலன்றி உயர்ந்த ஒழுக்க நெறிகளினாலும், உயர்ந்த செயல்களாலும்தான், ஒருவனை பிராமணன் எனலாம். உயர்ந்த பண்பியல்பு, செயல்களை யுடையவன், பிறப்பினால் கீழாயினும், ஒழுக்கத்தின் மேன்மை யினால் அந்தணனேயாவான். மேலான பிறப்பாளன் கீழானச் செயல்களை யுடையவனாக இருந்தால் அவன் கீழ்மகனே.

வினா: ப்ராஹ்மணோ அஸ்ய முகமாஸீத்
பாஹு ராஜன்ய : க்ருத|
ஊரு ததஸ்ய வைஸ்ய:
பதப்யாம் சூத்ரோ அஜாயத|| (யஜுர் வேதம்31.11)

யஜுர் வேதம் 31ம் அத்தியாயம் 11 ம் மந்திரம் சொல்கிறது : "பிராமணன் சான்றோன் முகத்திலிருந்து உண்டானான். சத்திரியன் தோள்களிலிருந்தும் வைசியன் தொடையிலிருந்தும், சூத்திரன் காலடிகளிலிருந்தும் உண்டாயினர். முகம் அல்லது புயம் தொடையாகாது; காலடி முகமாகாது. அதுபோல், பிராமணன், சத்திரியர் ஆகியோர் ஆகமாட்டான். சத்திரியர் ஆகியோர் பிராமணராகார்.

விடை: இம் மந்திரத்திற்கு நீர் செய்த பொருள் சரியில்லை. ஏனெனில், "புருஷன்" என்பது அருவாக நிறைந்த பரமாத்மைவைக் குறிக்கும். அருவான பொருள்களுக்கு முகம், தோள் முதலிய உறுப்புகளில்லை. அப்படி உறுப்புகளிருந்தால், இறைவன் எங்கும் நிறைந்து, எல்லாம் வல்லவனாய், உலகைப் படைத்துக் காத்து அழித்து உயிர்களின் நல்வினை-தீவினைக் கேற்ற நீதி செய்து எல்லாம் அறிந்தவனாய், பிறப்பு இறப்பற்ற சிறப்புடையோனாக ஆக முடியாது ஆதலால், இம்மந்திரத்தின் உண்மைப் பொருள் இதுவே: அஸ்ய, நிறைவான, பரமாத்மாவின் படைப்பில் முகத்தைப் போன்று அறிவொழுக்கங்களால் சிறந்த உத்தமன், ப்ராஹ்மண: பிராமணன். பாஹு (பாஹீர்வை பலம் பாஹீவை வீர்யம்-சதபத பிராமணம்) பாஹீர் என்பது பலம், வீரியம் இறைவன் படைப்பில் பலவானும், வீறுபெற்றவனும், ராஜன்ய: சத்ரியன். ஊரு என்பது தொடை, தொடையின் பலத்தால் நாடு நாடாகச் சென்று வாணிகம் செய்து சமுதாயச் செல்வத்தைப் பெருக்குகிறவன், வைச்ய: வைசியன். பதப்யாம் பாதத்தைப் போல . மிகத் தாழ்வான நிலையில் அறிவு குறைந்திருக்கிறவன் சூத்ர: சூத்ரன். அதுவுமின்றி சதபத ப்ராமணத்தின் கருத்தும் பொருளும் இதுவே

"யஸ்மாதேதே முக்யாஸ் தஸ்மான் முகதோ ஹ்யாஸ் ஜ்யந்த" (சதபதம் 6.1.1.10) அதாவது பிராமணர், மக்கள் சமுதாயத்தின் இன்றியமையாத் தலைவர்களாதலால், முகம் எனப்பட்டனர். உறுப்புக்களில் சிறந்தது தலை. அதுபோல நிறைவான கல்வியும் மேலான பண்பும் நற்செயலும், நல்லி யல்பும் உடைய தலைபோன்ற மனிதனே பிராமணன் எனப்படுகின்றார். அருவான பரமேசனுக்கு முகம் முதலிய உறுப்புகள் இல்லையாதலால், பிராமணன் ❬ வன் முகத்திலி ருந்து பிறந்தான் என்பது பொருளற்றது. அது ❬ ❬டி தன்மகனுக்கு மணம் புரிந்தாள் என்பது போன்று பொ ❬யாகும். ஒருவன் எதிலிருந்து பிறந்தானோ அந்த உருக் கொள் ❬றான். பிராமணன் முகத்திலிருந்தே பிறந்தான் என்றால் அவன் உருவம் முகம் போல உருண்டையாக மட்டும் இருக்கவேண்டும். சத்திரியன் வடிவம் தோளாக இருக்க வேண்டும். வைசியன் உருவம் தொடை போலும், சூத்திரன் உருவம் பாதம் போலும் இருக்கவேண்டும். அப்படியில்லை. நீ சொல்வது போலவே

பிறந்ததாக வைத்துக் கொள்வோம். நீ பிராமணன், யார் முகத்திலிருந்தும் பிறக்கவில்லை; எல்லோரையும் போல் தாயின் கர்ப்பத்திலிருந்தே பிறந்தாய். நீ புருஷன் முகத்தில் பிறக்காமல் பிராமணன் என்று உன்னை உயர்த்திக் கொள்வதேன்? ஆதலால் உன் விளக்கம் பொருளற்றது. நான் சொல்வதே சரி. பிறரும் அப்படியே சொல்லியிருக்கிறார்கள்.

> சூத்ரோ ப்ராஹ்மணதா மேதி
> ப்ராஹ்மணச் சேதி சூத்ரதாம்।
> க்ஷத்ரியாஜ் ஜாத மேவந்து
> வித்யாத் வைச்யாத் ததைவ ச॥ (மனு 10.65)

சூத்திரனாகப் பிறந்த போதிலும் பண்பியல்பு செயல்களால் அவன் பிராமணன், சத்திரியன், வைசியன் ஆகிறான். அப்படியே பிராமணன், சத்திரியன், வைசியன் குலத்தி லுதித்தும், கீழான பண்பியல்பு, செயலுடையவன் ஆனால் அவன் சூத்திரன் ஆகிறான். அதே மாதிரி சத்திரியனும் அந்தண்மையால், பிராமணன் ஆவான். கீழியல்பினர் கீழானவர்கள் ஆவார்கள். அதாவது, நான்கு வருணங்களில் எவனெவன் எந்தெந்த வருண தர்மத்தை காக்கிறானோ அதது ஆகிறான்; சாதி பிறப்பினால் வருவது அல்ல; ஒழுக்கத்தினால் அமைவது ஆகும் ஆபஸ்தம்ப சூத்திரம் கூறுகின்றது,

> "தர்ம சர்யயா ஜகன்யோ வர்ண:
> பூர்வம் பூர்வம் வர்ணமாபத்யதே
> ஜாதி பரிவ்ருத்தௌ॥
> அதர்ம சர்யயா பூர்வோ வர்ணோ
> ஜகன்யம் ஜகன்யம் வர்ணமாபத்யதே
> ஜாதி பரிவ்ருத்தௌ॥ (2)
>
> -(ஆபஸ்தம்ப 2-5-10-11)

இயல்பான ஒழுக்க நெறிகளினால் கீழான வருணத்தானும் உயர்ந்த வருணத்தை அடைகிறான். ஒருவன் எதற்குத் தகுதியோ அந்த வருணத்தில் வைத்து மதிக்கப்படுவான். (1) இயல்பாக நல்லொழுக்க நெறி தவறியவன் உயர் (பூர்வ) குலத்தில் பிறந்தவனேனும், கீழ்வரிசையில் வைத்து எண்ணப்படுவான். அவனை அந்த வர்ணமென்றே சொல்ல வேண்டும்.

(2) ஆண்களைப் போலவே பெண்களையும் இவ்வாறே வைத்து மதிக்க வேண்டும். இவ்வாறு ஆனால் அவரவர் தத்தமது வருண த்ர்மத்தைப் பழுதில்லாமல் பாதுகாத்து மிகவும் தூய்மை யானவர்களாக வாழ்ந்து மேலோங்க முயல்வார்கள். ஆதனால் எந்த வருணத்திற்கும் இகழ்ச்சியும், கீழ்த்தனமும் உண்டா வதில்லை.

-"சத்யார்த்த பிரகாசம்", பக்கம் 109-110
(சென்னை ஆரிய சமாஜ வெளியீடு)

ஆக, வேத நெறிப்படி பிறப்பால் சாதி இல்லை என்றும், பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திரர் எனப்படும் நால்வகை சமுதாயப் பிரிவுகள் மனிதர்களின் பண்பியல்பு, செயலால் மட்டுமே அமையுமென்றும் வலியுறுத்திய ரிஷி தயானந்தர் இந்தச் சமுதாயப் பிரிவை அமைத்து, இன்னவர் இன்ன வருணத்தவர் என்று அவருக்கு மட்டும் தெரியச் செய்யும் உரிமை வேத நெறி நிற்கும் அரசாங்கத்தினுடையது என்று விளக்கிச் சொல்கிறார். இன்றும் வக்கீல், டாக்டர், முதலிய தொழில்களை முறைப்படி கற்றுத் தேர்ந்தவர்களே அவ்வாறு அழைக்கப்பட்டு மதிக்கப்படுவது போல, நன்கு வேதம் பயின்று, சமுதாயத்தின் தலைமைப் பதவிகளில் இருக்கக் கூடியவர்கள் பிராமணர்கள் ஆவர். வேதப் பயிற்சியுடன் ஆட்சித் துறைகளில் மட்டும் கவனம் செலுத்துவோர் சத்திரியராகவும், வேதப் பயிற்சியுடன் தொழில், விவசாயம், வாணிபத்தில் ஈடுபடுவோர் வைசியராகவும், வேதப் பயிற்சியில் நாட்டமின்றி பிற துறைகளில் ஈடுபட்டுச் சேவை மட்டுமே செய்வோர் சூத்திரர்களாகவும் இருப்பார்கள். தொழில் காரணமாக மட்டுமே உள்ள இந்தப் பிரிவுகளில் உயர்வு, தாழ்வு இராது. சம உரிமைகளுடன், வாழ்க்கை வசதிகளைத் துய்த்து, வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று கூறுகின்றது சனாதன தர்மமாகிய வேத மதம்.

இப்போது ஒரு ஐயம் எழுகிறது. தன்னாட்சி பெற்று 48 ஆண்டுகளாகியும் இந்துக்களே (ஆரியர்களே) பெரும்பான் மையாக உள்ள இந்த நாட்டில் ஏன் இந்த அமைப்பு ஏற்பட்டும் சாதிகள் (வகுப்புகள்) ஒழியவில்லை? பெரும் பான்மையினரான இந்துக்கள் பிறப்பின் காரணமாகத் தமக்கு அமைந்திருப்பதாகக்

கருதிக் கொண்டிருக்கின்றத் தமது சாதிப் (வகுப்பு) பிரிவுகளைக் கைவிடாமல் கடைபிடித்து வருவதுதான் இதற்குக் காரணமாகும். பல்வேறு மதப் பழக்க வழக்கங்கள் தடையாக இருப்பதாலும் இந்த நிலைக்குக் காரணமாக இருக்கலாம். ஆரிய சமாஜம் பரவி அரசியலில் ஆதிக்கம் பெற்று, வேத நெறியில் இயங்கும் ஆட்சியை அமைக்கும் வரை, இந்த நிலை தொடரும் இந்த நிலை தொடருமாயின், எதிர்காலத்தில், இந்துக்களே சிறுபான்மையினராகி, அவர்களுடன் ஆரிய சமாஜமும் அழிந்து விடும் அபாயமும் இருக்கின்றது எனவே, தயானந்தர் காட்டிய நேர்மையான பாதையில் சென்று இந்துக்களை ஒருங்கிணைத்துச் செல்ல ஆரிய சமாஜம் முயன்று வருகின்றது. சுருக்கமாகக் கூறின், சாதிகளற்ற (வகுப்புகளற்ற) சமுதாயத்துக்கு ஒரே வழி வேத வழி என்பதுவே ஆரிய சமாஜம் கூறும் வழி.

நாலாயிரம் சாதி, உபசாதிப் பிரிவுகளாகச், சென்ற ஐயாயிரம் ஆண்டுகளாகப் பிளவுபட்டே வந்துள்ள இந்து சமுதாயங்கள். வேத நெறிப்படியான நான்கு வருணம் எனும் சமுதாயப் பிரிவுகளாக அமையும் பொழுது, அவை பண்பியல்பு, தொழில்களால் மட்டுமே அமையும் என்பதைக் கண்டோம், வேத காலத்தில் நிலைமை இப்படித்தான் இருந்தது என்பதை, மகாபாரத காலத்தில் வாழ்ந்த வேத ஞானியும், மன்னர் குலத்தவரும், அரசியல் அறிஞருமாக விளங்கிய மாபெரும் யோகியான ஸ்ரீ கிருஷ்ணர், இறைவன் வாக்காகத் தாம் அருளிய கீதையில் வலியுறுத்துகிறார்.

> "சாதுர் வர்ண்யம் மயா ச்ருஷ்டம்
> குண கர்ம விபாகச:"

அதாவது, "இறைவன் வாக்கு: தன்மைத் தொழில் தன்னுணர்வு எனும் அடிப்படையில் மனிதர்களை நால்வகைச் சமுதாயங் களாக நான் தோற்றுவித்தேன்." வர்ணம் என்ற இந்த சொல்லுக்குச் சாதி (வகுப்பு) என்று பொருள் கொண்டு, வேதங்களைப் பின்பற்றாத சிலர் தவறான பிரசாரம் செய்து மக்களைக் குழப்பி வருகின்றனர் "வர்ணம்" என்ற சொல்லுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது; ஏற்கப்பட்டது என்பதே பொருள். உலகியலிலும் எல்லாத் தேர்வுகளிலும் பண்பியல்பு தொழில்களின் அடிப்படையில் அமைவதை நாம்காண்கிறோம்.

மருத்து வருக்குப் பிறந்த காரணத்தாலேயே மருத்துவர் மகனோ, மகளோ மருத்துவர் ஆகிவிடுவதில்லை; அந்தத் துறையில் ஆர்வத்துடன் ஈடுபட்டு, அதற்கான பயிற்சி பெற்றால் மட்டும் தான் ஆக இயலும். அது போன்றே வேத நெறி சமுதாயத்தில் தகுதிகள் காரணமாக மட்டுமே பிராமண, சத்திரிய, வைசியர், சூத்திரர் என்ற பிரிவுகள் அமைந்து ஒன்றுக்கொன்று ஆதரவாகப் பக்கபலமாக இருந்து சமுதாயத்தைக் கட்டிக்காத்தன உலகில் எல்லா நாடுகளிலும் இது இயல்பாக இருக்கின்றது பாரதத்தில் மட்டும், ரிஷி முனிவர்கள் இந்த சமுதாய அமைப்புக்குப் பெயர் கொடுத்து வருண முறை என்று அழைத்தனர். பிற்காலத்தில் வேதப் பிரசாரம் மறைந்து போனதால் அந்தச் சமுதாயப் பிரிவுகள் இறுகிப் பல்வேறு சாதிகளாகப் (வகுப்புகளாக) பிளவுபட்டுப் பிறப்பின் அடிப்படையில் நின்றுபோய், வேதங்களில் நம்பிக்கை அற்றவர்களும், அவற்றை எதிர்ப்பவர்களுமான நாத்திக, இசுலாமியக் கிறித்துவ மதங்களால் தாக்கப்பட்ட பொழுது அழிந்தும் வரலாயின. இந்துக்களை, இந்த அழிவினின்றும் காத்தவர் ரிஷி தயானந்தரே. தமது உண்மையான வேத விளக்க நூல்களால், அவர் ஆரியர்களாகிய இந்துகளுக்குப் புத்துயிரும், புத்துணர்வும் கொடுத்தார். பண்புத்தொழில் பாகுபாடுகளை நீக்கி, இந்துக்கள் மீண்டும் பழையபடி நான்கு வருணத்தவராக வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இந்த நால்வகை வருணத்தாரின் பண்புத்தொழில் கடைமைகளைப் பற்றி “சத்தியார்த்தப் பிரகாசம்” என்ற மெய்ந்நெறி விளக்கம் என்ற நூலில் தயானந்தர் கூறியுள்ளதைச் சுருக்கமாக இங்கு எழுதுகிறோம்.

வேதம் ஓதல், ஓதுவித்தல், வேள்விசெய்தல், செய்வித்தல், ஈதல், ஏற்றல் என அந்தணர் கடமை ஆறு ஆகும். பிராமணன் தன்னுடைய சொந்த நன்மைக்காகக் கையேந்துவதுத் தாழ்வு என்கிறார் மனு. உண்மையான பிராமணன், மன அடக்கம், புலனடக்கம், விடாமுயற்சி, உடல்தூய்மை, மனத்தூய்மை, அமைதி, எளிமை, ஞானம், உயர் ஞானம், கடவுள் நம்பிக்கை உடையவனாக இருப்பான்.

சத்திரியன் எனப்படும் ஆட்சியாளன் கடமைகள்

பதினொன்று. குடிமக்களைக் காத்தல், தகுதி உடையோருக்கு ஆதரவு அளித்துப் பொருள் உதவி செய்தல், வேள்வி இயற்றல், வேதம் படித்தல் - படிப்பித்தல், புலனடக்கத்துடன் உடல் மன ஆத்ம உறுதியுடன் இருத்தல், பகைவரைக் கண்டு அஞ்சாது அவரை அடக்கும் திறன், சோர்வும், சலிப்பும் இன்றி உற்சாகத்துடன் செயலாற்றுதல், துணிவு, அரசியல் விவகாரங்களில் திறமையுடன் ஈடுபடுதல், போரில் வெற்றி பெறுதல், இறை நம்பிக்கையுடன் தானம் செய்தல் என்பன அவை.

வைசியனின் கடமைகள் ஆறு. பயிர் செய்தல், கால்நடைச் செல்வத்தைப் பாதுகாத்து வளர்த்தல், கல்வி பரவ தானம் செய்தல், வேள்வி இயற்றல், வேதம் கற்றல், எல்லா வகையான பயனுள்ள வணிகம் தொழில்களில் ஈடுபடுதல், வட்டி வணிகம் அனுமதிக்கப்படுகிறது - ஒரு நிபந்தனையுடன். நூற்றுக்கு நான்கு, ஆறு, எட்டு அல்லது பதினாறு வரை வருட வட்டி வாங்கலாம். அதற்குமேல் கூடாது. நூறு வருடங்களானாலும், ஒரு ரூபாய்க்கு இரண்டு ரூபாய் கொடுக்கப்பட்டால் அசலும் வந்ததாக கருதி, அதன் பிறகு வட்டி வாங்கலாகாது.

சூத்திரர் கடமை: தாம் உள்ளிட்ட மேற்கூறிய சமுதாயப் பிரிவினர் அனைவருக்கும் தம் உழைப்பைத் தந்து உதவி செய்தல் ஒன்றுமட்டுமே.

பிறப்பால் சாதிகளற்ற இந்த வேத சமுதாயத்தைப் பற்றி விளக்கிய பிறகு தயானந்தர் முடிவாகக் கூறுகிறார்:- "இந்த வருண பேதம் பிறப்பினால் வருவதன்று. பண்பியல்பு, தொழிலாலும், அறிவு, ஆற்றலாலும் வருவது. ஒவ்வொருவரும் அவரவர் தகுதிக்கேற்ற வருணத்தில் மதிக்கப்பெறுவர். இந்த முறையில் அறிவு முன்னேற்றம் அடையும், பிராமணரின் குழந்தைகள் மூடர்கள் ஆனால் சூத்திரர் ஆகவேண்டியதுதான் என்றும், அவர்கள் தாம் சரியாகக் கற்றுக் கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெறாவிடில் இழிநிலை அடைவோம் என்றும் பயந்து, தம் கல்வி ஒழுக்கங்களை உயிர்போலக் காப்பர். சூத்திரர், அந்தணத் தன்மையினராகும் ஆர்வத்துடன் முயல்வர். கல்விக்கும் அறநெறி விளம்பரத்துக்கும் அந்தணருக்கு உரிமை வழங்கல்

நலம் ஏனெனில், அறிவிலும் அறநெறியிலும் சிறந்த அவர்கள், அக்கடமையை நன்றாக நிறைவேற்ற முடியும். சத்திரியருக்கு அரசியல் உரிமை தந்தால், அரசிற்குக் கேடும், இடரும் வராமல் இருக்கும். பசு வளர்த்தல், வாணிகம் முதலியவற்றை வைசியரிடம் ஒப்புவிக்க வேண்டும் அவர்களே இச்செயல்களை நன்றாக நிறைவேற்றுவர் சூத்திரர் அதிகக் கல்வி இல்லாததால் உடலாற்றலால் சமுதாயத் தொண்டு செய்யலாம். இவ்வாறு, அவரவர் தகுதிக்கு ஏற்ப வர்ணமும், கடமையும் அமைந்து, அவரவருக்கு ஏற்ற உரிமையையும், கடமையையும் தந்து நாட்டை முன்னேற்றல் அரசர் முதலியோர் கடமையாகும்

-("சத்யார்த்தப் பிரகாசம்"என்ற மெய்ந்நெறிவிளக்கம் சென்னை ஆரியசமாஜம் வெளியீடு, பக்கம் 115)

பாரத நாட்டு அரசியல் கட்சிகள் இனியேனும் தமது போலியான மதச்சார்பின்மைக் கூச்சலை விட்டுவிட்டு, வேதநெறி அரசு அமைய செயல்படட்டும் குறிப்பாக, இந்துக்களின் வாக்குச்சீட்டுகளைப் பெற்றும், அவர்களை நடைமுறையில் ஏமாற்றும் கட்சிகள், இந்து மதத்துக்கும், சமுதாயங்களுக்கும் ஆணிவேர் வேதமே என்பதை மறக்க வேண்டாம். நமது நாட்டினைச் சுற்றியுள்ள நாடுகளின் அரசுகள் அனைத்தும், தம்முடைய மதத்தில் பற்றுக்கொண்டு மதச்சார்புள்ள அரசுகளாக விளங்குகின்றன. பாகிஸ்தான் என்று கூறிக் கொள்கின்ற நாடும், பங்களாதேசமும், இசுலாமில் பெருமிதம் கொள்கின்றன. பர்மாவும், ஸ்ரீலங்காவும் தம்மை பௌத்தமத நாடுகளாக அறிவித்துக் கொள்வதில் பெருமை கொள்கின்றன. நமக்கென ஒரு தர்மம், உயரிய ஒப்பற்ற வேத தர்மம் இருந்தும், நாம் முகவரி அற்றவர்களாக ஏன் விளங்குகிறோம்? இந்துக்கள் (ஆரியர்கள்) என்பதில் பெருமைகொள்ள ஏன் தயங்குகிறோம்? இடைக்காலத்தில் வேதம் கூறும் உண்மை நெறியை விடுத்து வேண்டாத பல வழக்கங்களைத் தோற்றிவித்து- அவையும் வேதத்தின் பெயரால் பல்வேறு சாதிகளாகப் (வகுப்புகளாகப்) பிரிந்து, அந்தப் பிளவுகள் காரணமாகவே சீரழிந்தும் வருகிறோம். இறையருளால் இந்த அழிவைத் தடுத்து உண்மை வழியாம் வேத வழிக்கு இந்துக்களை மீண்டும் கொண்டுவர வேண்டும்

என்பதற்காகவே ரிஷி தயானந்தர் தோன்றினார். ஆரிய சமாஜம் என்னும் உண்மையான வேத விளம்பர அவையினையும் நிறுவினார். இந்த இந்து சமுதாயச் சீர்திருத்த இயக்கத்தின் பயனாக, இன்று இந்துக்களிடையே சாதிகட்டுகள் தளர்ந்து கலப்புத் திருமணங்கள் என்றழைக்கப்படுகின்ற திருமணங்கள் பெருகி வருகின்றன. கொள்கை அளவிலாவது தீண்டாமையை ஒழிக்க நம்மவர்களுக்குத் துணிவும், ஆர்வமும் தந்தது ஆரிய சமாஜமே. ரிஷி பக்தராகிய லாலா ஹர்தயால் எனும் இந்துப் புரட்சி வீரர் கூறியதுப்போல "சாதிகளே (வகுப்புகளே) இந்தியாவின் சாபக்கேடு. எல்லா விதமான சாதி (வகுப்பு) அமைப்புக்களே நம்மை ஒரு அடிமை நாடாக்கின. நம்மை அடிமைப் படுத்தியது இசுலாமோ அல்லது இங்கிலாந்தோ அல்ல. நமது எதிரிகள் நமக்குள்ளேதான் இருந்தனர். இருந்துவருகின்றனர். பூசாரிக் கூட்டமும் (பிராமணர்கள் என்று கூறிக்கொள்வோர்) சாதியும் (வகுப்பும்) நம்மைக் கொன்றன கொன்றுகொண்டிருக்கின்றன. பிறப்பால் சாதி (வகுப்பு) என்ற எண்ணம் நம் சமுதாயத்தை ஆளும் வரை ஒருபொழுதும் நெடுங்காலத்திற்கு இந்தியாவால் ஒரு வெற்றிகரமானத் தன்னாட்சி அரசை நிறுவ இயலாது. நீங்கள் சொற்பொழி வாற்றலாம்: தீர்மானங்கள் நிறைவேற்றலாம்: சமுதாய நன்மைக்கான சட்ட முன்வடிவங்களைக் கணக்கின்றி கையெழுத்திட்டு நிறைவேற்றலாம். ஆனால், சாதி (வகுப்பு) மனப்பான்மை கொண்ட இந்துக்களால் ஒருபொழுதும் ஒன்றுபட்டு இயங்க இயலாது. "அவர்களால் ஒரு தன்னாட்சி அரசை நிறுவ முடியாது; வெற்றி பெறும் ராணுவத்தைத் தோற்றுவிக்க முடியாது". (1938 நவம்பர் இதழ் "மகாபோதி"யில் மேற்கோளாக வந்தபகுதி). தம்முடைய "அரசியல் சாசன"த்தில் லாலா ஹர்தயால் தெளிவாகக் கூறுகின்றார் "இந்து சமுதாயத்தின், பஞ்சாப் உள்ளிட்ட பாரதத்தின் எதிர்காலம் பின்வரும் நான்கு தூண்களின் மீதுதான் அமைக்கப்படும் என்று நான் உறுதியாகக் கூறுகிறேன். 1) இந்து ஒற்றுமை 2) இந்து அரசு 3) முசுலீம்களை மீண்டும் இந்து தர்மத்திற்குக் கொண்டு வருதல் 4) ஆப்கனிசுத்தானம் போன்றப் பண்டைய இந்துநாடுகளை (முன்னாள் காமரூபம்) இசுலாத்திலிருந்து வென்று, மீண்டும் இந்து நாடுகளாக்குதல்"

ஆனால் இன்று நடப்பது என்ன? ஆப்கானிசுத்தானை மீண்டும் இந்து சமயத்திற்குக் கொண்டுவருவது போகட்டும், இந்தியாவிலேயே பாகிஸ்தான் என்று கூறிக்கொள்கிற ஒரு நாட்டையும், பங்களாதேசம் போன்ற முசுலீம் நாடுகளை உருவாக்க ஒப்புக்கொண்ட இன்று இந்தியாவையே இசுலாமுக்குக் காணிக்கையாக்கும் திருப்பணியில் இந்துத் தலைவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

லாலா அவர்கள் குறிப்பிட்ட இந்து ஒற்றுமைக்கு வழி வேதநெறி ஒன்றுமட்டுமே. அதுமட்டுமே உண்மையில் சாதிப் பாகுபாடுகளற்ற (வகுப்புப் பாகுபாடுகளற்ற) இந்து சமுதாயத்தை உருவாக்கும். வருண சமுதாய அமைப்பை விளக்கி ஆரிய சமாஜம் இன்றும் கலப்புத் திருமணங்கள் என்றழைக்கப் படுகின்றத் திருமணங்களை ஊக்குவித்து வருகிறது. வேத காலத்தில் சாதிக் (வகுப்பு) கட்டுப்பாடுகள் இல்லை என்பதை ஆரிய சமாஜத்தை எதிர்க்கிற பழமையில் ஊறிய சனாதனிகள் கூட ஒப்புக் கொள்கிறார்கள். வேத வியாசரின் தாயார் சத்யவதி, ஒரு செம்படவத் தலைவரின் மகள் ஸ்ரீ கிருஷ்ணரின் தாயார் தேவகி, அசுர குலத்தைச் சேர்ந்தவர் - அதாவது வேதத்தை ஏற்காத குடும்பம் பஞ்சபாண்டவரில் ஒருவனாகிய பீமன் ஹிடிம்பி எனும் அரக்கியை மணந்ததாகவும், மற்றொருவனாகிய அர்ச்சுனன் உலூபி எனும் நாகநாட்டு அரசகுமாரியைத் திருமணம் செய்து கொண்டதாகவும் மகாபாரதம் கூறுகிறது. ஒரு நாகர் பெண்மணியின் வயிற்றில் பிறந்தவரே சோமஷ்ருவா எனும் முனிவர். ஜரத்காரு எனும் முனிவரும், ஒரு நாகர் பெண்மணியை மணந்தார். ஏன் புத்தருடைய குலமே இந்து - மங்கோலியக் கலப்பின் விளைவு என்கின்றனர் வரலாற்று நூலார். ஆரிய-திராவிட-மங்கோலிய-நீக்ரோ என்ற மனித இன வேறுபாடுகளை வேதம் ஏற்கவில்லை. “மனுர்பவ:” அதாவது, மனிதனாக இரு என்று அது அறிவுறுத்துகிறது “முத்தோன் வருக என்னாது அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்” என்ற சங்க இலக்கிய குறிக்கோள், வேதம் பரவியதால் ஏற்பட்டதாகும் திருக்குறள், “பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்” என்ற அழகான குறளால், வருண அமைப்பை சுருக்கமாக விளக்கியுள்ளதையும் அறிக. இந்த உயர்ந்த வருண அமைப்புத்தான், பண்டைக் காலத்தில், இந்துக்கள் எல்லாத்

துறைகளிலும் சிறந்து விளங்க உண்மையான காரணமாக இருந்தது. பண்டைக்கால இந்துக்களின் உயர்நிலை குறித்து, ஆரியசமாஜ அறிஞர் ஹர்பிலாஸ் சாரதா அவர்கள், Hindu Superiority - இந்து உயர்வு என்று தொகுப்பு நூலே இயற்றியுள்ளார். விவரங்களை அதனில் காண்க.

பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திரச் சமுதாயப் பிரிவுகளிடையே ஏற்றத் தாழ்வு இருந்ததில்லை. எல்லோரும் சம உரிமை பெற்றவர்களாக இருந்தனர் என்பதற்குப் பின்வரும் ரிக் வேத மந்திரமே போதுமான ஆதாரம்:

ஓம் அஜ்யேஷ்டாஸோ அகனிஷ்டாஸ
ஏ தே ஸம்ப்ராதரோ வாவ்ரது:
ஸௌபகாய.

-சமுதாயத்தின் உறுப்பினர்களிடையே ஒருவர் உயர்ந்தவர், மற்றவர் தாழ்ந்தவர் என்பது இல்லை. எல்லோரும் சம உரிமை உள்ள சகோதரர்களே. நாட்டின் நலனுக்காகவும் உயர்வுக்காகவும் எல்லோரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்."

இவ்வாறு இருக்க, தமிழ்நாட்டில் "சூத்திரன்" என்ற சொல் குறித்து மிகப்பயங்கரமான கருத்து, நச்சு நிறைந்தக் கருத்து திராவிடக்கழகம் போன்ற அமைப்புகளால் பரப்பப்பட்டு வந்துள்ளது சூத்திரன் என்றால் வேசி மகன்/தாசி மகன் என்றும், இது மனுஸ்ம்ருதியில் இருப்பதாகவும் கூறப்பட்டு எதிர்க்கப்படுகிறது மனுஸ்ம்ருதியைப் பலஇடங்களில் மேற்கோள் காட்டும் தயானந்தரே இடைக்காலப் பிராமணப் பண்டிதர்கள் பல இடைச் செருகல்களை அதனுள் சேர்த்து அதற்குக் களங்கம் உண்டாக்கிவிட்டனர் என்று கண்டித்தும் உள்ளார். 1875-ல் பூனா நகரத்தில் இந்துக்களின் வரலாறு பற்றிய சொற்பொழிவில் இதனைப் பற்றி அவர் குறிப்பிட்டு, மனுஸ்ம்ருதியின் பிற உயரிய சிந்தனைகளையும், கருத்துக் களையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே போதும். அத்தகைய கருத்துக்களுக்கு முரண்பட்டதாக உள்ளவற்றை அதன் ஆசிரியர் எழுதியிருக்க முடியாது என்ற உண்மை விளங்கும் என்றார். ரிஷியின் இந்தக் கொள்கையின் வழி நின்று, ஆரிய சமாஜம் (வட மாநிலங்களில்) கலப்படமற்ற மனுஸ்ம்ருதியையும் அதன் இடைச் செருகல்களையும் பதிப்பித்து, பெரும் தொண்டாற்றி

யுள்ளது சென்னை ஆரிய சமாஜமும், அதனைத் தமிழில் வெளியிடும் முயற்சியினை மேற்கொள்ளும்.

சூத்திரனுக்குப் பூணூல் அணியும் உரிமை உண்டு என்று சில நூல்கள் பறைசாற்றுகின்றன. (இன்றைய ஆரியசமாஜம், இதனை வேதத்திற்கு இசைந்தது என்று ஏற்றுக்கொண்டு நடைமுறையிலும் கொண்டு வந்துள்ளது) இதற்கு ஆதாரம் நிருக்தம் எனும் வேத அகராதி நூலே. "சூத்ர" என்ற சொல்லுக்கு நிருக்தம் விளக்கம் சொல்கிறது - "சுசா சோகேன ரோத்தி இதி சூத்ர" பிராமண, சத்திரிய, வைசிய எனும் வருணத்தாரின் தொழில்களுக்குத் தான் தகுதி பெறாமல் உடலுழைப்பை மட்டும் தர வேண்டியுள்ளதே என வருந்துவோனே சூத்திரன் எனவே அவனுக்கும் பூணூல் அணிவித்து, வேதம் பயில உரிமை தந்தது வேத சமுதாயம் உடலுழைப்பால் வேதப் பயிற்சியினை அறவே விட்டவர்களே, பின்னாளில் சூத்திரர் ஆயினர், அவ்வளவே எல்லோரையும் போலவே சூத்திரனுக்கு வேதக் கல்விபெற உரிமை உண்டென்பதை யஜுர் வேதம் ஆணித்தரமாக எடுத்துரைக்கிறது.

ஓம் யதே மாம் வாசம் கல்யாணீனீ மாவதானி
ஜனேப்ய:
ப்ரஹ்ம ராஜன்யாப்யாம் சூத்ராய
ச ஸ்வாய சார்யாய சாரணாய||
(யஜுர் வேதம் 26.2

பொருள்:- இறைவனாகிய நான் எல்லோருக்கும் நன்மை தருவதாகிய இந்த வேத வாணியை அளித்துள்ளேன் இது பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர், பெண்கள், வேலைக்காரர், மிகவும் அடிமட்டத்தில் உள்ளோர் உள்பட எல்லோருக்கும் உரியது (எனவே வேதத்தைக் கற்று பரவச் செய்வீர்)

(ஹர்பிலாஸ் சாரதா - 'ரிஷி தயானந்தர் வாழ்க்கை வரலாறு' ஆங்கில நூல் பக்கம் 36- முன்னுரைப் பகுதியில்)

இத்தகைய வேத விளம்பரம் செய்த ரிஷி தயானந்தர் சாதி (வகுப்பு) வேற்றுமை பாராட்டவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக ஒரு நாவித அன்பர் அளித்த உணவை அவர்

ஏற்று மகிழ்ந்த நிகழ்ச்சி உண்டு. அருகில் இருந்த தாம் உயர் வகுப்பினர் என்றெண்ணிக்கொண்டிருந்தப் பிராமணர்கள், "ஐயனே, அது நாவிதர் ரொட்டியாயிற்றே" என்று தடுக்க, அவர் மறுத்துப் புன்னகையுடன் கூறினார் - இது நாவிதர் ரொட்டியல்ல; கோதுமை ரொட்டி என்று. சாதி (வகுப்பு) பாராமல், தீண்டாதார் என்று தள்ளாமல், தம்மிடம் ஆசி பெற வந்த அன்பர்களுக்கு அவர் யஜ்ஞோபவீதம் எனும் பூணூல் அணிவித்து, காயத்ரி உபதேசம் செய்து, அவர்களை "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று முழங்கும் வேத நெறியில் செல்ல அறிவுறுத்தினர்.

எனவே, சூத்திரர் பற்றி இழிவாக எழுதியுள்ளப் போலி சாத்திர நூல்கள் அனைத்தும் அருவெறுப்புடன் தள்ளற் குரியவை ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமானுஜர் போன்ற இடைக்கால ஞானிகளும், வேதத்தின் உண்மைப் பொருள் பரவாத காலத்தில் வாழ்ந்த ஒரே காரணத்தால், சூத்திரர்களைப் பற்றி இழிவாகக் கூறிச்சென்றனர்.

அவர்களைவிட, தயானந்தர் தான் உண்மையில் பெரிய ஞானியா என்று விருப்பு வெறுப்புகளுக்காளான சில அன்பர்கள் பொங்கி எழலாம். நடுநிலை நின்று, ஆரிய சமாஜ இலக்கியங்களை அவர்கள் ஆராய்வராயின், அப்பெரியோர் களைத் தயானந்தர் குறை கூறவில்லை; அவர்கள் ஆற்றிய தொண்டினை வியந்து பாராட்டியுள்ளார். ஆனால் உபநிஷத்து-பிரம்ம சூத்திரம்-கீதை என்ற அளவுக்கு மட்டும் நின்று விட்டார்கள் என்பதையும் எடுத்துச் சொன்னார் என்ற உண்மை, தெரியும். அவர்கள் காலத்தில், வேதம் வெறும் வேள்விச் சடங்குக்கு மட்டுமே உபயோகிக்கப்பட்டு வந்ததுடன், வேத மந்திரங்களுக்குத் தவறான-சில இடங்களில் மிக அருவெறுக் கத்தக்க, ஆபாசமான பொருளும் வேத வித்தகர்கள் எனக்கூறப்பட்டச் சாயனர், மகிதரர் போன்றோரால் அளிக்கப்பட்டது என்பதையும் விளக்கிக் கண்டித்து, தம்முடைய வேத விளக்கம், பண்டைய ரிஷி முனிவர்கள் இயற்றிய உண்மை நூல்களின் அடிப்படையில் அமைந்துள்ளதையும் அவர் வலி யுறுத்தினார். தயானந்தர் தோன்றிய பிறகே, வேத விளக்க நூல்கள் வெளிவந்து இன்று யாவருக்கும் படிக்கக்

கிடைக்கின்றன. வேதங்களுக்குச் சாயனர், மகிதரர் உரைகள்/ விளங்கங்களை வெளியிடும் துணிவு, சனாதனிகளுக்கு இன்று இல்லை. இதுவே தயானந்தர் செய்த புரட்சியின் விளைவு

சூத்திரர்களைப் பற்றி மனுஸ்ம்ருதி இழிவாகக் கூறுகிறது என்று, திராவிடக் கழகத்தினர் எதிர்ப்பதை, மேலே குறிப்பிட்டோம். அதே மனுஸ்ம்ருதியின் ஒரு ஸ்லோகம் கூறுகிறது."நால்வகை வருணத்தோரும் சமுதாயத்தில் அவர்கள் ஆற்றும் கடமைகளால் உயர்ந்தோரே" (9-297)

ப்ரம்மஜானாதி ப்ராஹ்மண. பிரம்மம் என்றால் கடவுள், வேதம் என இருபொருள் உண்டு. இரண்டையும் அறிந்தவனே பிராமணன் பாணினி மகரிஷியின் இந்த கொள்கைப்படிப், பிறப்பால் மட்டுமே பிராமணன் என்று கூறிக்கொள்வோரை எப்படி ஏற்க முடியும்? வேதத்தை அறிந்தவனாக அவன் இருப்பின், அவன் பிராமணனே. எந்தச் சமுதாயத்தில் பிறந்தவனாயினும், வேதம் கற்றுக் கடவுளை அறிந்தவனே, உண்மைப் பிராமணன் என்பது ஆன்றோர் கொள்கை.

பிறப்பால் சாதி (வகுப்பு) இல்லை என்பதைப் புராணங்களும்,மகாபாரதமும் வலியுறுத்துகின்றன. மகாபாரதம் சாந்தி பர்வத்தில் பராசரர் கூறுகிறார்: "அரசனே,என் பாட்டனார் காஷ்யப ரிஷியும், வேதர், தாண்டவர், கிருபர், கக்ஷீவான், காமதர், யவக்ருதர், துரோணர், ஆயு, மாதங்கர், மத்ஸ்யர் ஆகியோரும் தாழ்ந்த குலத்தில் பிறந்தவர்களே. இக்குறை யிருப்பினும், அதனையும் கடந்துத் தம் முயற்சியால் வேதம் கற்று, அவர்கள் உயர்நிலை அடைந்தனர் (296.14.16) பிறிதொரு இடத்தில், மகாபாரதம் (அனுசாஸன பர்வம் 266-14) பிறப்பால் மட்டும் பிராமணத்துவம் கிட்டாது, அதற்கான தகுதிகள் வேண்டும் என்கிறது. காலத்தால் மிகப் பிற்பட்டதான பவிஷ்ய புராணம் கூட, ஞானம் உள்ள சூத்திரனே, ஞானமற்ற பிராமணனைவிட உயர்ந்தவன் என்று அறிவுறுத்துகிறது.

இனி, இதனைப் படிப்போருக்கு ஒரு ஐயம் எழலாம் இவ்வளவு ஆதாரங்கள் இருந்தும், ஏன் தன்னுரிமை பெற்றப் பாரதத்தில் கூட சாதி (வகுப்பு) ஒழிப்பு நடைபெற்று, உண்மையான சமுதாய அமைதி ஏற்படவில்லை ஏன்? ஆரிய சமாஜம் பரவி, இந்துக்களை ஒற்றுமைப்படுத்தவில்லை என்று

1926-ல் சுவாமி சிரத்தானந்தரின் உயிர்த் தியாகத்திற்குப் பின், ஆரிய சமாஜத் தலைவர்கள் காங்கிரஸில் ஈடுபட்டு, நாட்டு விடுதலைக்காகப் போராடினால், வேத நெறியினைப் பின்பற்றும் அரசினை காங்கிரசே அமைக்கும் என்ற நம்பிக்கையுடன், அரசியலில் முழுமையாக ஈடுபட்டார்கள். பாவம், அவர்கள் நினைத்தது நடக்கவில்லை! சனாதனிகளான இந்துத் தலைவர்கள், ஆங்கிலேயர்களுக்கு இன்னமும் மனத்தளவில் அடிமைகளாக இருந்ததாலும் (Mental Slaves) முசுலீம்களை சரிக்கட்டுவதற்காகக் காந்தியவர்களே ஆரிய சமாஜ எதிர்ப்புப் பிரசாரம் செய்ததாலும், இந்து உணர்வற்றவர்களாகி நாட்டுப் பிரிவினைக்கு வழி வகுத்தனர். இன்றும் பலவிதமான சாதி (வகுப்பு) மதப் பழக்க வழக்கங்கள், அவர்களை வேதத்தை ஏற்க மறுக்கும் சூழ்நிலையில் வைத்துள்ளன. தங்கள் இயலாமையை மறைக்க, மதச் சார்பின்மை என்னும் திரை கிடைத்ததை நன்கு பயன்படுத்திக் கொண்டு மகிழ்ச்சியுடன், இந்துக்கள் தற்கொலை செய்து கொள்வதற்கு உடந்தையாயிருக்கிறார்கள். வேத விளம்பரம் அரை நூற்றாண்டாக அறவே நின்று விட்டதால், இன்று ஆரிய சமாஜத்திற்கும் ஆள் இல்லை. மீனாட்சிபுரம் மத மாற்றமோ எச்சரிக்கை மணி அடித்து விட்டது. இப்பொழுது ஆரிய சமாஜம் விழித்துக் கொண்டு செயலாற்றத் துவங்கியிருக்கிறது.

இனி, சாதிகளற்ற (வகுப்புகளற்ற), எழுச்சி கொண்ட இந்துச் சமுதாயம், ரிஷி தயானந்தரின் பாதையில் செல்லும். எத்துணை உயர்ந்ததாயினும், மேலானதாயினும், அன்னிய ஆட்சி வேண்டாம். எவ்வளவு மோசமாக இருப்பினும் தன்னாட்சியே, தன்னுரிமையுடனான ஆட்சியே வேண்டும் என, இந்து விடுதலைக்காக முதற்குரல் எழுப்பியவர் ரிஷி தயானந்தர். அவர் விருப்பம் நிறைவேறி, வேத நெறி அரசு, பாரதத்தில் தோன்றும் நாள் வெகுத் தொலைவில் இல்லை. பிரம்ம ஒளி தேஜஸ், ரிஷி தயானந்தர் உருவிலும், ஆரிய சமாஜ உருவிலும், தோன்றியாகி விட்டது இனி வேதக் கொள்கைகளை நிறைவேற்ற ஒரு சத்திரிய ஆற்றலும், திறனும்தான் வேண்டும்.

அந்தச் சத்திரிய ஆற்றலும், திறனும் உருவாக, இந்து இளைஞர்களே, ஆரியசமாஜ இயக்கத்தில் ஈடுபடுவீர்!

வேதங்கள் அறிவு நூல்கள். அவற்றைப் படிப்பதும், படிக்கப் கேட்பதும், கற்பதும், கற்பிப்பதும், பிறருக்கு விளக்குவதும், ஒவ்வொரு ஆரியனின் தலையாய கடமையாகும்.

- ரிஷி தயானந்தர்.

ஓம்

காயத்ரி மகா மந்திரம்

ஓம் பூர்புவ ஸ்வ: ।
தத் ஸவிதுர் வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி ।
தியோ யோ ந: ப்ரசோதயாத் ॥

(யஜுர் 36.3)